## சுருக்கம்

வேளாண்மை – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அரசு நலத்திட்டங்கள் – வேளாண்மைத் துறை நலத் திட்டங்கள் குறித்து குறும்படங்கள் தயாரித்ததற்கான தொகை ரூ.5,76,000/– நிதி ஒதுக்கீடு வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை(வே.உ.6) துறை

அரசு ஆணை ( நிலை) எண்.14. நாள். 13.01.2015.

படிக்க.

1. அரசு ஆணை (நிலை) எண்.378, தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தி (தி.தொ.1) துறை நாள்.12.11.2012.
2. வேளாண்மை இயக்குநர், கடித எண்.ஐயம்வாம் 3 / 76449/2014, நாள்.5.8.2014 (ம) 19.09.2014

**ஆணை:–**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட ஆணைக்கிணங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, அரசுத் துறைகள் மூலமாக செயல்படுத்தப்பட்டுள்ள 55 முத்தான திட்டங்கள் குறித்து செய்தி மற்றும் அறநிலையங்கள் துறையின் கீழ் தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் மூலமாக குறும்படங்கள் தயாரிக்கவும், திரையரங்குகளில் வெளியிடவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அந்த வகையில் வேளாண்மைத் துறையின் மூலமாக செயல்படுத்தப்பட்டுள்ள உழவர் பெருவிழா மற்றும் காவேரி டெல்டா விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குதல் ஆகிய தலைப்புகளில் குறும்படங்கள் தயாரிக்கப்பட்டு திரையரங்குகளில் வெளியிடப்பட்டுள்ளது.

குறும்படங்களின் தலைப்பு மற்றும் குறும்படங்கள் தயாரிக்க செலவினத்தொகை விவரம்

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | குறும்படத் தலைப்புகள் | தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1 | “B Zone” | காவேரி டெல்டா விவசாயிகளுக்கு நிவாரணம் | 2,84,000.00 |
| 2 | Team Work Associates | உழவர் பெருவிழா | 2,92,000.00 |
| | | மொத்தம் | 5,76,000.00 |

த.பி.பா

2. வேளாண்மை இயக்குநர் தனது 05.08.2014 கருத்துருவில் மேற்காணும் குறும்படங்கள் திரையரங்குகளில் திரையிடப்பட்டதுடன், மாவட்ட செய்தி மற்றும் தொடர்பு அலுவலக வீடியோ வாகனங்கள் மூலமாகவும், அரசு கேபிள் டி.வி வாயிலாகவும் பொதுமக்கள் அறியும் வகையில் மிகச்சிறந்த முறையில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது என்றும், அந்தவகையில் மேற்குறிப்பிட்டுள்ள குறும்படத் தயாரிப்புச் செலவினத் தொகை ரூ.5,76,000–ஐ துறையின் விளம்பரம் மற்றும் IEC நிதியிலிருந்தும் கீழ்க்கண்ட செலவினக் கணக்குத் தலைப்புகளில் மேற்கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளார்:–

<table>
<tr><td>1.</td><td><u>செலவின கணக்கு தலைப்பு எண்.</u><br><br>2401-00 Crop Husbandry – 109 –Extension and Farmers Training Schemes XII Five Year Plan II State Plan JC – Agri. Documentary Film.<br>(DP Code No.2401 -00 – 109 – JC)</td></tr>
<tr><td>2.</td><td><u>துணை கணக்கு தலைப்பு எண்.</u><br>08 விளம்பரம் மற்றும் பிரச்சாரம்<br>01 விளம்பர கட்டணங்கள்.</td></tr>
<tr><td>3.</td><td><u>மேற்குறிப்பிட்டுள்ள செலவின கணக்குத்தலைப்பின் நிதி செலவின விபரம்.</u><br><br>
<table>
<tr><td>நிதி ஒதுக்கீடு</td><td>முதலாண்டு வரை நிதி ஒதுக்கீடு</td><td>இதுவரை செலவினம் (ரூ.)</td><td>மீதம் (ரூ).</td></tr>
<tr><td>77,000.00</td><td>16,300.00</td><td>16,300.00</td><td>61,000.00</td></tr>
</table>
</td></tr>
</table>

3. மேற்குறிப்பிட்டுள்ள செலவினக் கணக்குத் தலைப்பில் வேளாண் துறை சம்பந்தப்பட்ட உழவர் பெருவிழா, காவிரி டெல்டா விவசாயிகளுக்கு நிவாரணம் ஆகிய திட்டங்கள் குறித்த குறும்படங்கள் தயாரிப்புச் செலவினத் தொகையை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குச் செலுத்திட ரூ.6,53,000/–-க்கு (ரூபாய் ஆறு லட்சத்து ஐம்பத்தி மூன்றாயிரம் மட்டும்) கூடுதல் நிதி ஒதுக்கீடு வழங்கி ஒப்புதல் அளிக்குமாறும், காலாண்டு வாரியான செலவினக் கட்டுப்பாட்டிலிருந்து விலக்களிப்பு அளிக்குமாறும், வேளாண்மை இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மேற்கண்ட வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனத்துடன் பரிசீலித்து வேளாண்மைத் துறையின் மூலமாக செயல்படுத்தப்பட்டுள்ள உழவர் பெருவிழா மற்றும் காவேரி டெல்டா விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குதல் ஆகிய திட்டங்கள் குறித்து குறும்படங்களை திரையரங்குகளில் வெளியிடுவதற்காக குறும்படங்கள் எடுத்த நிறுவனங்களுக்கு நேர் செய்யப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ.5,76,000/– (ரூபாய் ஐந்து இலட்சத்து எழுபத்தாறாயிரம் மட்டும்) கூடுதலாக நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

த.பி.பா.

5. மேற்கண்ட கூடுதல் நிதி ஒப்பளிப்பு கீழ்க்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் செலவிடப்பட வேண்டும்.

2401– 00– பயிர் வளர்ப்பு –109 – விரிவாக்கப்பணியும் உழவர் பயிற்சியும் –II மாநில திட்டம் – JC – வேளாண்மை செய்தி படங்கள் –08 விளம்பரமும் பிரச்சாரமும் –01 – விளம்பரக் கட்டணங்கள் (த.தெ.கு.2401–00–109– JC –0811)

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் வரும் 2014–15–ம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் வழங்கப்படும். அவ்வாறு 2014–15 நிதி வழங்குவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள வேளாண்மை இயக்குநர், சென்னை– 5, அவர்களுக்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்படுகின்றது. 2014–15–ம் ஆண்டிற்கான இறுதி திருத்திய நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை நிதி (வேளாண்)த் துறைக்கு அனுப்பிடும்போது மேற்காணும் செலவினத்தையும் தவறாமல் சேர்த்து அனுப்பிடுமாறும் வேளாண்மை இயக்குநர், சென்னை–5, அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.கு எண்.710/வேளாண்/2014, நாள்.13.01.2015 மற்றும் கூடுதல் ஒதுக்கீட்டு பேரேடு எண். 2139 (இரண்டாயிரத்து நூற்று முப்பத்தொன்பது) இசைவுடன் வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி//

ராஜேஷ் லக்கானி,
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சென்னை–5,
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
தலைமைப் பொறியாளர் (கூ.பொ), தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, சென்னை–113.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–8(2 நகல்கள்)
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35/9

**நகல்**
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
நிதியமைச்சர் அலுவலகம், சென்னை–9
செய்தி மற்றும் சிறப்புத்திட்ட செயலாகக்கத் துறை அமைச்சர் அலுலலகம், சென்னை–9.
தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் (ம) செய்தி (வரவு–செலவு)த் துறை, சென்னை–9.
நிதித்(த.வ.அ.நி(ம) செ) (வேளாண் / வ.செ.பொது– II )துறை, சென்னை–9.
வேளாண்மை (அ.ந.3)த் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்